6. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2016 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.*

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) திருத்தம் இப்போதுதானே?*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போது பேசுங்கள். (குறுக்கீடு) அது முடிந்துவிட்டது. (குறுக்கீடு)* Bill pass *செய்யப்பட்டுவிட்டது. (குறுக்கீடு)*

திரு. க. பாலகிருஷ்ணன்: *விளக்கம்தான் கேட்கிறேன். வேறொன்றுமில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது விவாதம் இல்லாமல் தீர்மானம் நிறைவேற்றப்படுவதாகும். (குறுக்கீடு) இல்லை, அது விவாதம் இல்லாமல் நிறைவேற்றப்படுவது. நாம் ஏற்கெனவே* Business Advisory Committee-*ல் சொல்லியிருக்கிறோம். (குறுக்கீடு)* B.A.C.-*யிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) என்ன? சொல்லுங்கள்.*

***திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதிநிலை அறிக்கையில், இடைக்கால நிதிநிலை ஒதுக்கீடு என்பது 60,610 கோடி ரூபாய்க்கு ஒதுக்கப்படும் என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், இப்போது துறைவாரியாக மானியத்திற்கு ஒதுக்கப்படுகிறபோது, வருவாய்க் கணக்கில் ரூ.93,411 கோடியும், மூலதனக் கணக்கில் ரூ.16,615 கோடியும் மற்றும் கடன் கணக்கில் ரூ.2,624 கோடியும் என்று இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, 60,610 கோடி ரூபாய் இடைக்கால பட்ஜெட்டில் இருக்கும் என்று சொல்கிற சூழ்நிலையில், அதைவிடக் கூடுதலான மானியத் தொகை ஒதுக்கப்படுவதற்கான காரணம் என்ன? அதற்கு விளக்கம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

2016 *பிப்ரவரி* 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இது இடைக்கால பட்ஜெட்தான். அதில் கூறுவதற்கு ஒன்றுமில்லை. இது* vote on account *தான். இப்போது,* vote on account-*ஐதான் நாம் கேட்கிறோம். அதனால், பெரியதாக ஒன்றும் கூறுவதற்கில்லை. (குறுக்கீடு) இது* vote on account *தான். அடுத்த பட்ஜெட்டில்தான் உங்களுக்கு விளக்கமாகத் தெரியும். இது* vote on account. *ஒவ்வொரு துறைக்கும் கேட்டிருக்கிறோம். அவ்வளவுதான்.*

பிற்பகல் 2-30

12. அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2016); 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2016); 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2016); 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2016); 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2016) மற்றும் 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடலில் மீன்பிடிப்பதை ஒழுங்குமுறைப்படுத்தும் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2016) ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.